உ

சிவமயம்



# நற்சிந்தனைப் பாடல்கள்

## சிவயோக சுவாமிகள்

அருளியது

சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியம்
வெளியிட்டது.
1-1-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நற்சிந்தனைப் பாடல்கள்

## சிவயோக சுவாமிகள்

அருளியது

சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியம்
வெளியிட்டது.
1-1-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவயோக சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

நம சிவயாய

# சிவயோக சுவாமிகள்

சிவயோக சுவாமிகள் யாழ்ப்பாணத்தில்உள்ள மாவிட்டபுரம் என்னும் ஊரில் 1872ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதியன்று அவிட்ட நட்சத்திரத்தில் திரு அவதாரம் செய்தார். இவரது தந்தையார் பெயர் அம்பலவாணர், தாயார் பெயர் சின்னாச்சிப்பிள்ளை. சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் ஒருவர் சதாசிவம் என்பர், இன்னொருவர் யோகநாதன் என்பர், வேறொருவர் தம்பியய்யா என்பர்.

சுவாமிகள் கொழும்புத் துறையிலேயே வசித்துக் கல்வி கற்று வந்தார். அவர்களது ஆரம்ப பாடசாலை ஓர் கத்தோலிக்க நிறுவனமாகையால் ஜோன் (John) என்னும் கிறிஸ்தவப் பெயரிலேயே பதியப் பெற்றார். ஆரம்ப பாடசாலைப் படிப்பு முடிந்ததும் மேல் படிப்புக்கு St. Patrick's கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அங்கு ஓர் குறிப்பிட்ட தரத்துக்கு ஆங்கிலமும் தமிழும் படித்தார்.

சிறிது காலத்தில் கிளிநொச்சி நீர்ப்பாசனப் பகுதியில் களஞ்சியப் பொறுப்பாளராக அவருக்கு உத்தியோகம் கிடைத்தது. தமது கடமைகளைத் திறம்படவும் நேர்மையாகவும் செய்தார். சக ஊழியர்களுடன் அன்பாகப் பழகினார். இயன்றளவு தான தருமங்களைச் செய்தார். அல்லும் பகலும் ஆண்டவன் மீது நாட்டங்கொண்டிருந்தார். ஓய்வு நேரங்களிலெல்லாம் சைவத் திருமுறைகளையும் தமிழ் மறையாம் திருக்குறளையும் ஆர்வத்தோடு படித்து மனனம் செய்தார். இன்னும் ஔவை மொழியையும், தாயுமானார் பாடல்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்தடிகள் திருநூல்களையும், சித்தர் பாடலையும் கற்றுத் தெளிந்தனர்.

கிளிநொச்சியில் பணிபுரியும் காலத்தில் கண்டிப்பான பிரமசரிய விரதம் பூண்டிருந்த சுவாமிகள் ஒழுக்கத்தால் வைரித்த வாழ்வு, வணக்கம் மணக்கும் வேலை, கடவுள்பக்தி, ஞானியர் நாட்டம், ஞான நூற்பயிற்சி என்னும் இயல்புகள் முதிர்ந்து ''இறைகளோடிசைந்த இன்பம் இன்பத்தோடிசைந்த வாழ்வு'' வாழ்வதற்கு தகைமையான ஒருவராய் மலர்ச்சி பெற்றார். இந்நிலையில் செல்லப்பா சுவாமிகளைப்பற்றி கேள்விப்பட்டார். உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு செல்லப்பரிடம் சென்றனர். அவர் யோக இளைஞனை நோக்கி இடிபோன்ற குரலில் 'யாரடா நீ' என்று அதட்டினார்.

''யாரடா நீ என்று அதட்டிஞன்
அன்றேயான் பெற்றேன் அருள்'' என்று சுவாமிகள் பிற்காலத்தில் பாடிக்காட்டியவாறு அன்றிலிருந்தே செல்லப்ப தேசிகரின் ஆஞைக்கு உட்பட்டார். சோதனைகளாலும் வேதனைகளாலும் சாதனைகளாலும் யோகர் ஓர் ஒப்புயர்வற்ற மகா முனிவரானார். அந்த நிலையில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் எங்கள் மத்தியில் வாழ்ந்து எம்மையெல்லாம் வழிநடத்திஞர். அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பாடல்கள் அனைத்தும் ''நற்சிந்தனை'' என்னும் பெயர் கொண்ட நூலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இப்பரம தேசிகர் 1964ம் ஆண்டு பங்குனி ஆயிலியத்தில் மகா சமாதி அடைந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
நமசிவாய
குருபரன் திருவடிசரணம்

# எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தான் எங்கள் குரு நாதன்
இணையடிஎன் தலைவைத்தான் எங்கள் குரு நாதன்
அன்னைபிதாக் குருவானான் எங்கள் குரு நாதன்
அவனி எல்லாம் ஆளவைத்தான் எங்கள் குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குரு நாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குரு நாதன்
நன்மைதீமை அறியாதான் எங்கள் குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குரு நாதன். 1

தேகம்நீ அல்லவென்றான் எங்கள் குரு நாதன்
சித்தத்திற் திகழுகின்றான் எங்கள் குரு நாதன்
மோகத்தை முனியென்றான் எங்கள் குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றான் எங்கள் குரு நாதன்
வேகத்தை கெடுத்தாண்டான் எங்கள் குரு நாதன்
விண்ணும் மண்ணும் ஆகிநின்றான் எங்கள் குரு நாதன்
தாகத்தை ஆக்கிவிட்டான் எங்கள் குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தான் எங்கள் குரு நாதன். 2

வாசியோகம் தேரென்றான் எங்கள் குரு நாதன்
வகாரநிலை அறியென்றான் எங்கள் குரு நாதன்
காசிதேசம் போ என்றான் எங்கள் குரு நாதன்
கங்குல் பகல் இல்லையென்றான் எங்கள் குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றான் எங்கள் குரு நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனந்தெ ரியுமென்றான் எங்கள் குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றான் எங்கள் குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றான் எங்கள் குரு நாதன். 3

இருவழியை அடையென்றான் எங்கள் குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றான் எங்கள் குரு நாதன்
கருவழியைக் கடவென்றான் எங்கள் குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றான் எங்கள் குரு நாதன்
ஒருவரும் அறியாரென்றான் எங்கள் குரு நாதன்
ஓங்கார வழியென்றான் எங்கள் குரு நாதன்
நிருமலனாய் இருவென்றான் எங்கள் குரு நாதன்
நீயேநான் என்று சொன்னான் எங்கள் குரு நாதன். 4

திக்குத் திகாந்தமெல்லாம் எங்கள் குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தான் எங்கள் குரு நாதன்
பக்குவமாய் பேணென்றான் எங்கள் குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றான் எங்கள் குரு நாதன்
அக்குமணி அணியென்றான் எங்கள் குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றான் எங்கள் குரு நாதன்
நெக்குநெக் குருகென்றான் எங்கள் குரு நாதன்
நித்தியன்நீ என்று சொன்னான் எங்கள் குரு நாதன். 5

தேடாமல் தேடென்றான் எங்கள் குரு நாதன்
சீவன் சிவனென்றான் எங்கள் குரு நாதன்
நாடாமல் நாடென்றான் எங்கள் குரு நாதன்
நல்லவழி தோன்றுமென்றான் எங்கள் குரு நாதன்
பாடாமற் பாடென்றான் எங்கள் குரு நாதன்
பத்தரினம் சேரென்றான் எங்கள்குரு நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாமல் வழிபடென்றான் எங்கள் குரு நாதன்
வையகத்தில் வாழ் என்றான் எங்கள் குரு நாதன். 6

தித்திக்கும் ஒருமொழியால் எங்கள் குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தான் எங்கள் குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றான் எங்கள் குரு நாதன்
எல்லாம்நீ என்றுரைத்தான் எங்கள் குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வான் எங்கள் குரு நாதன்
விண்ணவரும் அறியவொண்ணான் எங்கள் குரு நாதன்
தத்துவா தீதன்ஆனான் எங்கள் குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தான் எங்கள் குரு நாதன். 7

ஆதியந்தம் இல்லையென்றான் எங்கள் குரு நாதன்
அதுவேநீ என்றுரைத்தான் எங்கள் குரு நாதன்
சோதிமயம் என்றுசொன்னான் எங்கள் குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றான் எங்கள் குரு நாதன்
சாதி சமயமில்லான் எங்கள் குரு நாதன்
தானாய் விளங்குகின்றான் எங்கள் குரு நாதன்
வாதியரும் காணவொண்ணான் எங்கள் குரு நாதன்
வாக்கிறந்த இன்பம் தந்தான் எங்கள் குரு நாதன். 8

மூச்சந்திக் குப்பையிலே எங்கள் குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்றான் எங்கள் குரு நாதன்
அச்சமொடு கோபமில்லான் எங்கள் குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டான் எங்கள் குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள் குரு நாதன்
பாங்காக ஏறென்றான் எங்கள் குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள் குரு நாதன்
தாவுபரி கட்டென்றான் எங்கள் குரு நாதன். 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமேநாம் என்றுரைத்தான் எங்கள் குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றான் எங்கள் குரு நாதன்
போமேபோம் வினையென்றான் எங்கள் குரு நாதன்
போக்குவர வில்லையென்றான் எங்கள் குரு நாதன்
தாமேதாம் என்றுரைத்தான் எங்கள் குரு நாதன்
சங்கற்பம் இல்லையென்றான் எங்கள் குரு நாதன்
ஓமென்று உறுதிதந்தான் எங்கள் குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றான் எங்கள் குரு நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
நம சிவாய

# சிவசிவ ஓம்ஓம்

சிவசிவ செல்வக் கணபதி ஓம்ஓம்
சிவசிவ செல்வவே லாயுதன் ஓம்ஓம்
சிவசிவ செல்வச் சிவதொண்டன் ஓம்ஓம்
சிவசிவ செல்வச் சிவனடியார் ஓம்ஓம்
சிவசிவ எம்முன் திருவருள் ஓம்ஓம்
சிவசிவ செல்வத் திருமால் ஓம்ஓம்
சிவசிவ அயன்முதல் தேவர்கள் ஓம்ஓம்
சிவசிவ ஐம்பெரும் பூதங்கள் ஓம்ஓம்
சிவசிவ சிவசிவ ஐம்பொறி ஓம்ஓம்
சிவசிவ சிவசிவ ஐம்புலன் ஓம்ஓம்
சிவசிவ சிவதச நாடிகள் ஓம்ஓம்
சிவசிவ சற்குரு நாதன் ஓம்ஓம்

---

## எல்லாம் சிவமே

அப்பனும் அம்மையும் சிவமே அரிய சகோதரர் சிவமே
ஒப்பில் மனைவியும் சிவமே ஒதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசரும் சிவமே தேவாதி தேவரும் சிவமே
இப்புவி எல்லாம் சிவமே என்னை ஆண்டதும் சிவமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
நம சிவாய

# முத்திக்கு வழி

ஆசிரியப்பா

முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ!
சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நிந்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெய் அடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புனல் ஆடல்
வழுவில்ஐந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிறல் தன்போற் பிறரையும்
பார்த்தல், பணப்பற் றொழித்தல் பண்புடன்
வார்த்தை யாடல், வாதனை தீர்த்தல்
கோத்திரம் குலமெனும் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை இன்றி என்றும்
ஆண்டவன் அடிக்கீழ் அமர்ந்து வாழ்தலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

நம சிவாய

# ஒழுக்கம் விழுப்பம் தரும்

ஒழுக்கம் விழுப்பம் தரும் தம்பிமாரே
ஓம் என்று சிந்தை செய்வீர் தம்பிமாரே
அழுக்கா றவாவெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்கும் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே
மலரடியைச் சிந்தைசெய்வீர் தம்பிமாரே
பழுத்த அடியருடன் தம்பிமாரே
பாடிப் பணியவேண்டும் தம்பிமாரே
மூப்புவந் தடையுமுன்னே தம்பிமாரே
முழுதும் அறியவேண்டும் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற்பொருள் தேடவேண்டாம் தம்பிமாரே
ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே
ஆன்மாவே நாங்கள் காணும் தம்பிமாரே
ஓதி உணரவேண்டும் தம்பிமாரே
உய்யவழி அதுகாணும் தம்பிமாரே
சாதி சமயபேதம் தம்பிமாரே
சங்கற்ப மென்றறிவீர் தம்பிமாரே
வாழிவாழி சிவன்நாமம் தம்பிமாரே
மனசாரச் சொல்லுங்கள் தம்பிமாரே
வாழிசிவ னடியார்கள் தம்பிமாரே
மன்னவனும் செங்கோலும் தம்பிமாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

நமசிவாய

# சும்மாவிருக்கும் சுகமறிய வேண்டும்

திருநீறும் ஐந்தெழுத்தும் வேண்டும் - வேல்வேல்
சீவனே சிவனென்று தெரிந்துகொள்ள வேண்டும் - வேல்வேல்

உருவேற வேசெபிக்க வேண்டும் - வேல்வேல்
ஒருவருக்கும் பொல்லாங்கு செய்யாமை வேண்டும் - வேல்வேல்

கருவூரில் வாராமை வேண்டும் - வேல்வேல்
கண்கவரும் மின்னாரை எண்ணாமை வேண்டும் - வேல்வேல்

குருபாதம் மறவாமை வேண்டும் - வேல்வேல்
குறையொன்று மின்றி நாம்வாழ வேண்டும் - வேல்வேல்

கொல்லாமை கள்ளாமை வேண்டும் - வேல்வேல்
கோபம் பொறாமை கொள்ளாமை வேண்டும் - வேல்வேல்

எல்லார்க்கும் அன்புசெய்ய வேண்டும் - வேல்வேல்
எனதுயான் என்பதை விட்டுவிடவேண்டும் - வேல்வேல்

நல்லோர் இணக்கமே வேண்டும் - வேல்வேல்
நடுநிலைமை மாறா திருக்கவேண்டும் - வேல்வேல்

சொல்போலே சொல்லுறுதி வேண்டும் - வேல்வேல்
சும்மா இருக்கும் சுகமறிய வேண்டும் - வேல்வேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
நமசிவாய

# ஏத்துக பொன்னடி

## நிலைமண்டில ஆசிரியப்பா

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீ றணிக
பழுதிலைந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட் டரற்றுக
அன்னை பிதாவின் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போல காக்க அறத்தை
செய்வன எல்லாம் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவாஅ ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்கள் தம்மை
ஒருபோதும் மறவாது உறவு கொள்க
கருவினில் வாராக் காரணம் காண்க
தன்னை அறிக தானே ஆகுக.
மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனம்தள ரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக குறைவெலாம் தீர்க
ஈசன் அடியிணை ஏத்தி ஏத்தி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
பத்தன் இவனென மன்னவர் பேசவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தன் இவனெனத் தேவர்கொண் டாடவும்
இவ்வண்ணம்
ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்றும் இருந்தும் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை ஒன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
நமசிவாய

# சிவசிவசிவ

அன்பரன்பது சிவ சிவ சிவ ஆசையற்றது சிவ சிவ சிவ
இன்பமயமது சிவசிவசிவ ஈசனுயிர்தொறும் சிவசிவசிவ
முன்பின் அற்றது சிவசிவசிவ மோனமுதலது சிவசிவசிவ
தன்வயத்தது சிவசிவசிவ சர்வவல்லபம் சிவசிவசிவ.

பொன்னிறத்தது சிவசிவசிவ போக்கிலாதது சிவசிவசிவ
என்னிடத்தது சிவசிவசிவ எங்குமுள்ளது சிவசிவசிவ
மண்ணிடத்தது சிவசிவசிவ மந்திரரூபம் சிவசிவசிவ
விண்ணிடத்தது சிவசிவசிவ வேதமானது சிவசிவசிவ.

மட்டிலாதது சிவசிவசிவ மங்கைபங்கது சிவசிவசிவ
முட்டிலாதது சிவசிவசிவ மூவராவது சிவசிவசிவ
கிட்டொணாதது சிவசிவசிவ கிருபையுள்ளது சிவசிவசிவ
எட்டிலானது சிவசிவசிவ ஏகமாவது சிவசிவசிவ.

அன்னையாவது சிவசிவசிவ அப்பனாவது சிவசிவசிவ
முன்னையுள்ளது சிவசிவசிவ முனிவர்புகழ்வது சிவசிவசிவ
என்னையாள்வது சிவசிவசிவ எடுத்ததிருவடி சிவசிவசிவ
பின்னையென்பிழை சிவசிவசிவ பேதாபேதம் சிவசிவசிவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
நமசிவாய

# சிவனடியைச் சிந்திநெஞ்சே

அன்பிலா ரோடுறவு கொள்ளாதே அடுத்தோருக்குத்
துன்பத்தைச் செய்யாதே சூதும்வாதும் பேசாதே
இன்பத்தில் துன்பத்தில் ஏகமன சாயிருந்து
தென்புடனே அரன்பாதம் அந்திசந்தி சிந்திநெஞ்சே.

ஆரோடும் பகையாதே ஆசைதனைக் கொள்ளாதே.
ஊரோடே ஒத்துநட உண்மையைத் தேடிக்கொள்
நீரோடே வெகுநேரம் நீந்திவிளை யாடாதே
சீரோடே சிவன்பாதம் எப்போதும் தேடுநெஞ்சே.

இடுவதை மறவாதே ஏழைகளை இகழாதே
கெடுவது நினையாதே கேளிரைப் பிரியாதே
சுடுவது சொல்லாதே துணையின்றிச் செல்லாதே
படுதலையிற் பலிகொள்ளும் பரமனைப் பாடுநெஞ்சே.

ஈவது விலக்காதே இழிதொழில்கள் செய்யாதே
சாவது வந்தாலும் சத்தியத்தை மறவாதே
ஆவதும் அழிவதும் நமக்கில்லை எனவறிந்து
தேவர்கள் தொழுதேத்தும் சிவனடியைச் சிந்திநெஞ்சே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
நமசிவாய

# வீரமாமயில் ஏறும் வேலவ

இராகம் - கரகரப்பிரியா தாளம் - ரூபகம்

பல்லவி

வீர மாமயில் ஏறும் வேலவ — விளங்கு
கௌரி பாலகா — வா

அநுபல்லவி

கானக் குறத்தி மகிழும் பாதா — காக்கும்
கடவுள் துதிக்கும் நாதா. (வீர)

சரணம்

எனக்கும் உனக்கும் பேத மேனோ
எடுத்துச் சொன்னால் போதம் போமோ
மணக்கும் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா. (வீர)

பரவ வரமருள் பரமதயாளா

மரகத மயின்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனார் அருள் பாலா
பரவ வரமருள் பரமதயாளா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

நமசிவாய

# நீயென்னை ஆளாயோ

சோதிப் பிழம்பே சுரிகுழலாள் தன்கணவா
ஆதிப் பொருளே அறியாமை யால்மிகவும்
பாதிக்கப் பட்டேன் பரனே இனியுனது
நீதிக் கழல்காட்டி நீயென்னை ஆளாயோ.

ஆளான மெய்யடியார் அகங்கோயில் கொண்டவனே!
கேளாயோ இன்னுங் கிருபையுனக் கில்லையோ?
பாழாகப் போகாமற் காப்பதுன்றன் பாரமையா
வாளா விருந்தாற் பழியுனக்கு வந்திடுமே.

வந்துன் அடியடைந்த மெய்யடியார் வருத்தமெல்லாம்
வெந்துபோம் வண்ணம் மிகுகருணை நீயளித்தி
அந்தமொழி கேட்டு அடியேனும் உன்னடிக்கீழ்
வந்தேன் கருணை வழங்காய்நீ வான்பொருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

நமசிவாய

# மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட்(டு) உண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்கும் தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

நமசிவாய

# ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்தது. ஒழுக்கம் உடையார் எல்லாம் உடையார். ஒழுக்கங்களாவன கொல்லாமை, கள்ளாமை, பிறர்வசை உரையாமை, பிறர் பொருள் கவராமை, தாழ்மை, பொய் உரையாமை முதலியனவாம்.

எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடும் செய்து பழகுதல் வேண்டும். அப்படிச் செய்து பழகிவந்தால் மன உறுதி உண்டாகும். அஃதாவது மனம் ஏகாக்கிர சித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்ம சக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். இவர் பகைவர் இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்திற் புகுந்து கவலையை உண்டாக்காது. எனக்கொரு குறைவுமில்லை, என்னிடத்திலே எல்லோரும் அன்பாய் இருக்கிறார்கள், நானும் எல்லாரிடத்திலும் அன்பாயிருக்கிறேன் என்று அடிக்கடி நினைத்து நினைத்து சாதிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

நமசிவாய

## நான் யார்

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது பகவான்களுடைய அநுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது.

ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தரும நெறியில் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்.

இப்படிக்கு
அவனே நானே

ஆண்டவனையன்றி வேறொரு பொருளும் இல்லை. அனைத்தும் அவன் செயல். உனது சுமை முழுவதையும் திருவடிக் கீழ் இறக்கிவைத்து இளைப்பாறு. கவலைக்கு இடம் கொடாதே. நான் செய்தேன், அவன் செய்தான் என்று நலியாதே. விழித்திரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
நமசிவாய

# சிவோகம் பாவனை

தெய்வத்தை நம்பு. முழுமனத்தோடு நம்பு. உலகில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும்போதும், நிற்கும்போதும், நடக்கும்போதும், கிடக்கும்போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலும் தெய்வம் என்னும் நினைவே நிறைவதாக. நானில்லை கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

## மகா வாக்கியங்கள்

ஒரு பொல்லாப்பும் இல்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாம் அறியோம்
முழுதும் உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட் பிரிண்ட், கொழும்பு - 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org